*Chapter XXII Code of Criminal Procedure.)*
*IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ATTUR.*

*Case No.:* ***CC. 332/2020***

*Deposition of Witness for Prosecuting/Defence/Court* ***PW-2 (LW-1)***

*Name / Father's Name:* ***திரு.சண்முகம் த/பெ. குப்புசாமி***

*Village/ Taluk:*

*Calling, Age:*

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **10.06.2025.**

துவக்க நேரம் 03.22 A.N

**முதல் விசாரணை**

1) நான் தற்பொழுது திருவண்ணாமலை வனக்கோட்டத்தில் செய்யார் சமூக வனக்காடு பகுதியில் வனவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 27.02.2018 அன்று நான் கல்ராயன் வனச்சரகத்தில் வனக்காப்பாளராக பணிபுரிந்தபொழுது, அன்றைய தினம் எனது வனச்சரக அலுவலருக்கு கிடைத்த ரகசிய தகவலின் பேரில், கரியகோயில் பீட், சூலாங்குறிச்சி, காப்புக்காடு பிளாக்- 5 என்ற இடத்தில் வெள்ளையன் என்பவர் காப்புக்காட்டில் அத்துமீறி உள்ளே நுழைந்து காப்புக்காட்டை சுத்தம் செய்யும் விதமாக முட்புதர் மற்றும் பலஜாதி மரங்களை அகற்றி, அவர் ஆக்கிரமிப்பு செய்வதற்காக அவ்வாறு செய்திருந்தார்.

2) மேற்படி சம்பவம் சம்மந்தமாக வெள்ளையன் என்பவரை சம்பவயிடத்தில் பிடித்து காப்புக்காட்டை இவ்வாறு சுத்தம் செய்து, ஆக்கிரமிப்பு செய்வது வனச்சட்டப்படி தவறு என்று அவரிடம் எடுத்துச்சொன்னோம். எடுத்துக்கூறியவுடன் அவர் செய்த தவறை அவர் உணர்ந்தார்.

3) பின்பு புலன்விசாரணை அதிகாரி திரு.ஞானராஜ் அவர்கள், எதிரி வெள்ளையனை கைது செய்தார். புலன் விசாரணை அதிகாரியின் உத்தரவின் பேரில் குற்றத்தை ஒப்புக்கொண்ட எதிரியிடமிருந்து ஒப்புதல் வாக்குமூலத்தை நான் பதிவு செய்தேன். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் வனவர் தங்கராசு

உடனிருந்து சாட்சி கையொப்பம் செய்தார். பின்பு ஸ்தல மகஜர், என்னால் பெரியகல்வராயன் பிரிவு வனவர் முன்னிலையில் தயார் செய்யப்பட்டது. புலன் விசாரணை அதிகாரி, என்னை விசாரித்தார்.

**குறுக்கு விசாரணை**

1) மேற்படி காப்புக்காட்டிற்குரிய சர்வே எண்ணை நாங்கள் இவ்வழக்கு கோப்புகளில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். அந்த காப்புகாட்டிற்கு சர்வே எண் உள்ளது என்றால் சரிதான். காப்புக்காட்டில் அழிக்கப்பட்டதாக சொல்லப்பட்ட இடத்தில் எதிரியுடன் சேர்த்து புகைப்படம் எடுத்து இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளோமா என்றால் இல்லை, ஆனால் அழிக்கப்பட்டதாக சொல்லப்பட்ட இடத்தை மட்டும் புகைப்படம் எடுத்துள்ளோம். நாங்கள் அந்த புகைப்படம் எடுத்தபொழுது எதிரி அந்த இடத்தில் இருந்தாரா என்றால் இருந்தார்.

2) சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்தை ஒட்டி அமைந்துள்ள பாதை தலக்கரை கிராமத்திற்கு செல்லக்கூடிய பாதை என்றால் இல்லை. நான் தயார் செய்துள்ள ஒப்புதல் வாக்குமூலத்தில் எதிரியின் பெயர் உள்ள இடத்தில் வேறொரு பெயர் எழுதி, அந்த பெயர் ஒயட்னர் வைத்து அழிக்கப்பட்டு, அதன் மேல் வெள்ளையன் என்று எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

3) ஒப்புதல் வாக்குமூலத்தில் சாட்சி கையொப்பம் செய்துள்ள தங்கராசு என்பவர், சின்னகல்ராயன் மலை பகுதியின் வனவர் என்றால் சரிதான், அவருக்கு கூடுதல் பொறுப்பாக பெரியகல்ராயன் மலையும் ஒதுக்கப்பட்டிருந்ததால் அவர் பெரியகல்ராயன் மலைப்பகுதியையும் பாதுகாக்க பொறுப்புடையவர்.

4) இவ்வழக்கு கோப்பில் தங்கராசு என்பவருக்கு கூடுதல் பொறுப்பு வழங்கியதற்கான ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். ஒப்புதல் வாக்குமூலம், ஸ்தல மகஜர் ஆகியவை தனிநபர்கள் முன்னிலையில் தயாரிக்கப்படவில்லை என்றால் சரிதான், அங்கு பொதுமக்கள் இருக்க வாய்ப்பில்லை.

5) கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் பொருட்களை, நீதிமன்றத்தில் ஒப்படைத்தோமா என்றால் இல்லை. காப்புக்காட்டில் அழிக்கப்பட்டதாக சொல்லப்படும் இடத்தின் ச.எண்ணை இவ்வழக்கில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

6) என்னிடம் காட்டப்படும் ஆவணமானது எதிரி வெள்ளையனின் தந்தை கோடாங்கி தீர்த்தன் என்பவருக்கு வழங்கப்பட்ட செட்டில்மென்ட் பட்டா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது, என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் கடந்த 06.06.1986 ல் ஒரு கோடங்கி தீர்த்தன் என்பவருக்கு செட்டில்மென்ட் பட்டா வழங்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

7) ஒப்புதல் வாக்குமூலத்தில் கையெழுத்து செய்துள்ள அதிகாரிகள் மூவரும் மூன்று மைகளில் கையெழுத்து போட்டுள்ளோம் என்றால் சரிதான். வெள்ளையன் என்பவர், எங்களிடம் ஒப்புதல் வாக்குமூலமே கொடுக்கவில்லை என்றும், இவ்வழக்கிற்காக எங்கள் அலுவலகத்தில் நாங்களே மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தை தயார் செய்துகொண்டோம் என்றும், இந்த ஆவணம் சம்பவயிடத்தில் தயார் செய்யப்படவில்லை என்றும் சொன்னால் சரியல்ல.

8) ஸ்தலமகஜர் ஸ்டேட்மென்டும் எங்கள் அலுவலகத்தில் வைத்துதான் தயார் செய்யப்பட்டது என்றும், எதிரியிடமிருந்து எந்த பொருளையும் ஸ்தலமகஜரில் சொல்லியுள்ளவாறு நாங்கள் கைப்பற்றவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடம் காப்புக்காடுதான் என்பதற்கே ஆவணத்தை நாங்கள் ஒப்படைக்காத நிலையில், இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ள GPS மேப், வரைபடம் ஆகியவைகள் இவ்வழக்கிற்கு சம்மந்தம் இல்லாத ஒன்று என்று சொன்னால் சரியல்ல.

9) GPS மேப்பில் சர்வே நெம்பர் காட்டும் என்றால் அப்பொழுது அந்த வசதி GPS மேப்பில் இல்லை. எங்கள் அலுவலகத்தில் காப்புகாட்டிற்குரிய சர்வே எண்கள் குறித்த பதிவேடுகள் உள்ளதா என்றால் இல்லை. எதிரி வெள்ளையன் பெயரில் உள்ள பட்டா நிலத்தை சுத்தம் செய்ததை, தவறாக புரிந்துகொண்டு அது

காப்புக்காடு என்று எதிரி வெள்ளையன் மீது இவ்வழக்கினை தவறாக தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. இந்த வழக்கு சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடம் வனத்துறைக்கு சம்மந்தப்பட்ட காப்புக்காடு அல்ல என்று சொன்னால் சரியல்ல. நான்தான், அப்பாவி எதிரி வெள்ளையன் மீது தவறாக புள்ளிவிவர கணக்கிற்காக தவறாக வழக்கு பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

10) உண்மையில் நான் சொன்ன இடத்தில் சம்பவம் நடந்திருந்தால் நாங்கள் தாக்கல் செய்துள்ள புகைப்படத்தில் எதிரி வெள்ளையனும் சேர்ந்து இருந்திருப்பார் என்றும், அவ்வாறு இது உண்மை சம்பவம் இல்லாததால்தான் எதிரி வெள்ளையன் நாங்கள் எடுத்த புகைப்படத்தில் இல்லை என்றும் சொன்னால் சரியல்ல. மேற்படி அரசு காப்புக்காட்டிற்கு அரசாணை உள்ளது என்றும், அதனையும் நான் இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றும் சொன்னால் சரிதான்.

முடிவு நேரம் 03.55 A.N

C UDAYASUNDARAM Digitally signed by C UDAYASUNDARAM Date: 2025.06.10 17:11:13 +0530

Judicial Magistrate No.2, Attur.